


**04. 02. 2026**

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

2. வளர்ச்சியடைந்த பாரத பாதையை இந்தியா - அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் முன்னெடுத்து செல்வதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ்கோயல் மக்களவையில தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாட்டில் இளைஞர்களுக்கான என் கனவு ! என் எதிர்காலம் ! திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று துவக்கி வைத்தார்.

4. அஇஅதிமுக ஆட்சியமைந்தால் முதியோர் ஓய்வூதியத் தொகையும், ஆதரவற்ற பெண்களுக்கான மாதாந்திர தொகையும் 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

5. ஹராரேயில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான உலககோப்பை ஆடவர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்

அரையிறுதியில் இந்தியாவிற்கு எதிராக ஆப்கானிஸ்தான் முதலில் பேட் செய்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை

இந்தியா அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் அமளி காரணமாக மக்களவை இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

அவை இன்றுகாலை கூடியதும் எதிர்கட்சியினர் இப்பிரச்சனைகளை எழுப்பி அவையின் மையபகுதியில் குழுமி முழக்கமிட்டனர்.

எதிர்கட்சிகளின் செயல்குறித்து அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா அதிர்ப்தி வெளியிட்டு அவையின் மாண்பை காக்க வலியுறுத்தினார்.

இத்தகைய செயல்கள் ஜனநாயகத்தை வலுவிழக்க செய்வதோடு மக்களின் நம்பிக்கைகயையும் நீர்த்துப்போக செய்வதாக குறிப்பிட்டார்.

எதிர்கட்சிகளின் அமளி தொடர்ந்ததால் அவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

பியூஷ்கோயல்

இந்தியா - அமெரிக்கா இடையிலான வரலாற்று சிறப்பு மிக்க வர்த்தக ஒப்பந்தம் வளர்ச்சியடைந்த பாரத பாதையை முன்னெடுத்து செல்வதாக மத்திய வர்த்தக அமைச்சர்
திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று அறிக்கை தாக்கல் செய்து பேசிய அவர், இருநாடுகளுக்கு இடையிலான உறவும் மேம்படும் என்றார்

இந்த வர்த்தக ஒப்பந்தத்தால் வேளாண்மை, பால்வளம் உட்பட பல்வேறு துறைகளின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று தெரிவித்தார்.

கடந்த 2-ம் தேதி இருநாட்டு தலைவர்களிடையே நடைபெற்ற இருதரப்பு உலகளாவிய பிரச்சனைகள் தொடர்பான தொலைபேசி உரையாடலை அவர் எடுத்துரைத்தார்.

இதனொரு பகுதியாக இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கான வரி 18 சதவிகிதமாக குறைக்கப்படும் என்று அதிபர் டிரம்ப் அறிவித்ததையும் சுட்டிக்காட்டினார்.

பிற நாடுகளின் மீது அமெரிக்கா விதித்த வரியை காட்டிலும் இது குறைவாக இருப்பதால், அமெரிக்க சந்தையில் இந்தியாவின் ஏற்றுமதிக்கான போட்டிக்கான வாய்ப்புகள் பெருகும் என்றார்.

இந்த ஒப்பந்தத்தால் சிறு குறு நடுத்தர நிறுவனங்கள், திறன்படைப்பாளர்கள், தொழிற்சாலைகளுக்கு புதிய வாய்ப்புகள் உருவாகும் என்றும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

கடந்த ஓராண்டில் பல்வேறு சுற்றுகளாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தே இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்கட்சிகளின் பலத்த அமளியினூடே இந்த அறிக்கையை திரு. பியூஷ்கோயல் தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை - நிபுபென்

நாட்டில் 100 சதவிகித குடும்ப அட்டைகள் மின்னணுமயமாக்கப்பட்டு 99 சதவிகிதம் ஆதாருடன் இணைக்கப் பட்டுள்ளதாக மத்திய உணவு பொது விநியோகத்துறை இணையமைச்சர் திருமதி. நிபுபென் பாம்பானியா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அவர், உணவு பாதுகாப்பிற்கு பிரதமர் உயர் முன்னுரிமை வழங்குவதாக எடுத்துரைத்தார்.

பிரதமரின் உணவு தானிய திட்டத்தின் கீழ் 81 கோடி பேருக்கு இலவச உணவு தானியங்கள் அளிக்கப்படுவதை சுட்டிக்காட்டினார்.

ஒரே நாடு ! ஒரே குடும்ப அட்டை ! திட்டத்தின் கீழ் புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டின் எப்பகுதியிலும் உள்ள

நியாய விலைக் கடைகளில் உணவு தானியங்களை பெறமுடியும் என்றும், 201 கோடி பரிவர்த்தனைகள் இதன்கீழ் நடைபெற்று இருப்பதாகவும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரண் ரிஜிஜு

குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாத விதிகளை மீறி எதிர்கட்சித்தலைவர் திரு. ராகுல்காந்தி பேச விரும்புவதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குறை கூறியுள்ளார்.

மக்களவையில் அலுவல்கள் சுமூகமாக நடைபெறாமல் இருப்பதற்கு திரு. ராகுல் காந்தி மீது குற்றம் சாட்டிய திரு. ரிஜிஜு மக்களவையின் நேரத்தை மட்டுமல்லாமல் பேச விரும்பும் பிற உறுப்பினர்களின் நேரத்தையும் வீணடிப்பதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பரிக்சா பே சர்ச்சா

நாடுமுழுவதும் 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணாக்கரின் தேர்வு பயத்தை போக்கும் வகையிலான பரிக்சா பே சர்ச்சா நிகழ்வில் அனைவரும் பங்கேற்குமாறு பிரதமர் திரு.நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

தேர்வெழுதும் மாணாக்கர், ஆசிரியர், பெற்றோர் ஆகியோருடன் பிரதமர் நடத்தும் இக்கலந்துரையாடல் நிகழ்வு நாளைமறுநாள் நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இஸ்ரோ

தூத்துக்குடி குல சேகர பட்டினத்திலிருந்து வரும் மார்ச் மாதத்தில் ராக்கெட் ஏவ திட்டமிடப்பட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், PSLV, GSLV ஆளில்லா ககன்யான் விண்கலம் போன்றவையும் விண்ணில் செலுத்தப்படும் என்றும் கூறினார்.

சந்திரயான் - 4 விண்கலம் ஏவ திட்டமிடப்பட்டுள்ளதாகவும், ஜப்பானும் இந்தியாவும் இணைந்து சந்திரயான் – 5 விண்கல திட்டத்தை நவீன தொழில்நுட்பங்களுடன் உருவாக்கி வருவதாகவும் திரு. நாராயணன் குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழக மக்களின் தேவைகளை அரசு நிறைவேற்றி வருவதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் 254 கோடி ரூபாய் மதிப்பில் 29 புதிய திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசியஅவர், மக்களுக்கான நலத்திட்ட சிறப்பு முகாமில்

ஒருகோடியே 49 லட்சம் மனுக்களுக்கு தீர்வு கண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இம்மாவட்டத்தில் 390 கோடி ரூபாய் மதிப்பில் 199 புதிய திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டதாக முதலமைச்சர் கூறினார்.

16 துறைகளை சோந்த 51 சேவைகள் எளிதாக கிடைக்கும் வகையில் இளைஞர்களுக்கான என் கனவு ! என் எதிர்காலம் ! திட்டத்தை துவக்கி வைத்தார்.

இணையதளத்தில் இளைஞர்கள் பதிவு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒருலட்சத்து 80 ஆயிரம் புதிய பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

திருச்சியில் நடைபெற்ற விழாவில் மாநில அமைச்சர்கள் திரு.K.N.நேரு, திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

காஞ்சிபுரத்தில் மாநில அமைச்சர் திரு.ஆர்.காந்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஆளுநர்

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் 46-வது பட்டமளிப்பு விழா தமிழக ஆளுநர் திரு. R.N. ரவி தலைமையில் இன்று நடைபெற்றது.

863 பேர் ஆளுநரிடமிருந்து நேரடியாக பட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

எடப்பாடி கே. பழனிச்சாமி

தமிழ்நாட்டில் அஇஅதிமுக ஆட்சி அமைந்தால் முதியோர் ஓய்வூதியத் தொகையும், ஆதரவற்ற பெண்களுக்கான மாதாந்திர தொகையும் 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், மாணாக்கரின் வங்கி கல்விக்கடன் தள்ளுபடி செய்யப்படும்

அரிசி குடும்ப அட்டைதாரர்ளுக்கு ஆண்டுக்கு 3 சமையல் எரிவாயு சிலிண்டர் இலவசமாக வழங்கப்படும்,

ஜல்லிக்கட்டு உயிரிழப்போரின் குடும்பங்களுக்கு 10 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும்,

மாற்றுத்திறனாளிகளின் கூட்டுறவு வங்கி கடன்கள் தள்ளுபடி செய்யப்படுவதோடு,

சிறுபான்மையின மகளிர் சுயதொழில் தொடங்க வட்டியில்லா கடன் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

கடந்த 17-ம் தேதி அறிவிக்கப்பட்ட முதற்கட்ட தேர்தல் வாக்குறுதிகளை தொடர்ந்து 2-வது கட்ட தேர்தல் வாக்குறுதிகள் இன்று அறிவிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

கனிமொழி

திமுக தேர்தல் அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்று அக்கட்சியின் தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு தலைவர் திருமதி. கனிமொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று இதுதொடர்பான ஆலோசனை மேற்கொண்ட அவர், தேர்தல் அறிக்கை குறித்து பல்வேறு தரப்பினரிடம் கருத்துக்களை கேட்டறிந்ததாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

உலக புற்றுநோய் தினம்

உலக புற்றுநோய் தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

புற்றுநோய் வராமல் தடுப்பது, ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை பெறுவது தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்படுகிறது.

"புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தனித்துவம் வாய்ந்தவர்" என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

இந்நாளையொட்டி மத்திய சுகாதார குடும்பநலத் துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா வெளியிட்ட செய்தியில் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க புற்றுநோயிலிருந்து மீண்டவர்களுக்கு ஆதரவளிப்போம் என கூறியுள்ளார்.

நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் கேன்சர் சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், மருந்துகளுக்கு சுங்கவரி விலக்களிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

சேலத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் புற்றுநோய் இல்லா சமூகத்தை உருவாக்க உறுதிமொழி ஏற்கப்பட்டது.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பேரணியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணாக்கர் பங்கேற்று பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

புற்றுநோயை தவிர்க்க உணவு முறையில் மாற்றங்களின் அவசியத்தை புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கோவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகளில் பரிசோதனை வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக ராணிப்பேட்டை புற்றுநோய் தடுப்பு அரசு மருத்துவர் பரணி தேவி கூறியுள்ளார்.

கன்னியாகுமரியில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் 500-க்கும் மேற்பட்ட மாணாக்கர் பங்கேற்றனர்

❖❖❖❖❖❖❖❖❖❖

போராட்டம்

தேர்தல் வாக்குறுதிக்கு ஏற்ப காலவரையற்ற ஊதியம், காலிப்பணியிடங்களை நிரப்புதல், உள்ளிட்ட பல்வேறு

கோரிக்கைகளை வலியுறுத்தி தேனியில் 2-வது நாளாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் 600 பேரை காவல் துறையினர் இன்று கைது செய்தனர்.

இந்த போராட்டம் காரணமாக தேனி – கம்பம், தேனி – பெரியகுளம் சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஸிம்பாப்வே ஹராரேயில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான உலககோப்பை ஆடவர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் அரையிறுதியில் இந்தியாவிற்கு எதிராக முதலில் பேட் செய்யும் ஆப்கானிஸ்தான் சற்றுமுன் 12 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 51 ரன் எடுத்திருந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

❖❖❖❖❖❖❖❖❖❖